1987 மார்ச் 25]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவேண்டும், தற்போது எவ்வளவு பேர்கள் தற்காலிகமாகப் பணியாற்று கிறார்கள், அதனுடைய தன்மைகள் என்ன என்பதைக் கண்டறிய.

ஆனால் ஏற்கெனவே இருந்தவர்களை 22—9—1984 அன்றைய ஆணையின்படி 25—6—1984 அன்று தற்காலிகப் பணியிலிருந்த தமிழ்நாடு அரசுப் பணி, தமிழ்நாடு அமைச்சுப் பணியிலுள்ள இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்றும் தமிழ்நாடு செயலகப் பணியில் உள்ள தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் ஆகிய பணியாளர்கள் அனைவரின் பணியும் வரன்முறை செய்யப் பட்டது. இப்போது இருக்கிற நிலைமைக்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

அண்ணா மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம்.

158—(* வினா எண் 4742) **திரு. கு. ரமணி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் கட்ட, திண்டுக்கல் செட்டிநாயக்கன்பட்டி கிராமத்தில் 300 ஏக்கருக்கு மேல் நிலம் ஆர்ஜிதம் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், 50-க்கும் அதிகமான பாசனக் கிணறுகளும் 100-க்கும் அதிகமான விவசாயக் குடும்பங்களும் உள்ள விவசாய நிலங்களுக்குப் பதிலாக அதே ஊரில் வேறு நிலங்களை ஆர்ஜிதம் செய்ய விவசாயிகளிடம் இருந்து கோரிக்கை வந்துள்ளதை அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அண்ணா மாவட்டத்தில் மாவட்ட தலைமை அலுவலக கட்டடங்கள் கட்டவும், அலுவலர் குடியிருப்பு கட்டடங்கள் கட்டவும் செட்டிநாயக்கன்பட்டி கிராமத்தில் 215.47 எக்கர் நில எடுப்பு செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

(ஆ) நில எடுப்பில் உள்ள நிலங்களில் நல்ல நிலையில் 20 கிணறுகளும், பாழடைந்த நிலையில் ஐந்து கிணறுகளுமே உள்ளன. இந்த நிலங்களில் உள்ள விவசாயிகள் எண்ணிக்கை சுமார் 60 ஆகும். அரசால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழு பல்வேறு நிலங்களைப் பார்வையிட்டு இறுதியாக இந்த நிலங்களை நில எடுப்பு செய்ய பரிந்துரைத்துள்ளதால் வேறு நிலங்களை நில எடுப்பு செய்யும் அவசியம் ஏற்படவில்லை.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசன நிலங்களை, நன்செய் மற்றும் நல்ல விளைச்சல் தரக் கூடியதாகவும் உள்ள பாசன நிலங்களைக் கட்டடங்கள் கட்டுவதற்கு எடுத்துக் கொள்ளக்கூடாது, அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்து வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது என்ற ஒரு கொள்கை இருக்கிறபோது—மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடங்கள் வரவேண்டியது அவசியம்—அதற்காக அருகாமையில் நல்ல இடம் இருக்கிறது. விவசாயிகளுக்குக் கஷ்டங்களை ஏற்படுத்தாமல்—இன்றைக்கு உண்மையிலேயே 100-க்கு மேற்பட்ட விவசாயிகள் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பக்கத்திலே இருக்கிற பாசனமில்லாத நல்ல இடத்தை எடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட அண்ணா மாவட்டம் அமைந்ததற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும், பிற அலுவலகங்களும் கட்டுவதற்கான வகையில் நிலம் கையகப்படுத்துகின்ற பெருமுயற்சி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதற்கேற்ற வகையில் ஒரே இடத்தில் பரந்த அளவில் நிலம் கிடைக்குமா என்று மூன்று, நான்கு இடங்கள் பார்க்கப்பட்டு அதிலே மிக முக்கியமாக செட்டிநாய்க்கன்பட்டி கிராமத்தில் புல எண் 633 இன்ன பிற எண்களில் அடங்கிய 259.69 ஏக்கர் பரப்பு கொண்ட பட்டா நிலத்தையும் அதே கிராமத்திலே வேறு ஒரு பகுதியில் உள்ள பட்டா நிலங்களையும் சீலப்பாடி கிராமத்தில் உள்ள நிலங்களையும் இந்த மூன்று இடங்களையும் ஆராய்ந்து பார்த்ததற்குப்

1987 மார்ச் 25]

பிறகு செட்டிநாய்க்கன்பட்டி கிராமத்தில் 311 ஏக்கர் நிலப்பரப்பு ஓரே இடத்தில் அமைந்திருப்பது ஏற்றது என்று கருதப்பட்டது. அந்த 311 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டபோது அங்கே பாசன வசதிகள், பயிரிடுகிற நிலைமைகள் எல்லாம் இருந்தன என்று அங்கே இருக்கின்றவர்கள் முறையீடு செய்ததன் அடிப்படையில் ஓரளவுக்கு அந்த முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த வகையிலே, 80.69 ஏக்கர் கைவிடப்பட்டு இப்பொழுது 215.47 ஏக்கர்தான் இந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்குக் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே 311 ஏக்கர் கையகப்படுத்த எண்ணினாலும் பிறகு 80.69 ஏக்கர் கைவிடப்பட்டது. இப்பொழுது 215.47 ஏக்கர்தான் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதிலே நஞ்சை கையகப் படுத்தப்பட்டிருப்பது 75 சென்ட்தான். தோட்டம் 59 ஏக்கர் 7 சென்ட். அதிலே மானாவாரி 155 ஏக்கர் 1 சென்ட்; ஆக, 215.47 ஏக்கரிலே, நஞ்சை, மொத்தத்திலே 75 சென்ட்தான் வருகிறது. ஏற்கனவே, இருந்ததிலே 80.69 ஏக்கர் கைவிடப்பட்டு விட்டது. அதிலே 825 மரங்கள் இருக்கின்றன. உள்ளபடி, தகுந்த அளவிலே, பல்வேறு வசதி வாய்ப்புகள் மற்றவையெல்லாம் காணும்போது, இந்த இடத்தைவிட்டால் வேறு இடம் இல்லையென்ற நிலை ஏற்படுகிற காரணத்தால்தான், வேறு வழியில்லாத நிலையில் இந்த 215 ஏக்கரையும் கையகப்படுத்த வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டது.

(முற்பகல் 10-10)

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் ரொம்ப விளக்கமான பதிலைக் கொடுத்திருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடம் அந்த இடத்திலே ஏற்பட வேண்டியது நியாயம் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது. ஆனால், இந்த மாதிரி நிலைமை பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. சாதாரண மக்கள் வீடு கட்டுவதற்கு வாங்கிய நிலத்தைக் கூட திரும்ப ஆர்ஜிதம் பண்ணி வாங்குவது நடந்து வருகிறது. அப்படிப்பட்ட நிலைமை வராமல் இருப்பதற்கும் இப்பொழுது அந்த இடத்திலே எடுக்கப்பட்ட இடங்கள் தோப்பு

நிலம் என்றால் சில இடங்களில் நஞ்சை பூமியைவிட, நெல் விளையக்கூடிய பூமியைவிட, அதிகப்படி பலன் கொடுக்கக்கூடிய கிணறு உள்ள தோட்ட பூமி எடுக்கப்பட்டது. இப்படி எடுக்கப் பட்டதில், அந்த நிலச் சொந்தக்கார விவசாயிகளுக்கு என்ன நஷ்டஈடு அல்லது வேறு தகுந்த நிலம் அல்லது அவர்கள் விவசாயம் செய்வதற்கான ஏற்பாட்டை அரசு செய்துள்ளது? அப்படிப்பட்ட உதவி அவர்களுக்குச் செய்து அவர்கள் குடும்பம் அழியாமல் இருக்க பாதுகாப்பு செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றிய முழு விவரக் குறிப்புகள் என்னிடத்திலே இல்லையென்றாலும் அதற்கெல்லாம் சிலபல வரைமுறைகள் இருக்கின்றன. அந்த வரைமுறைகள் அடிப்படையிலே அவர்களுக்கு நஷ்டயீடு வழங்கப்படுகின்றது. அந்த நஷ்டயீட்டை, கணக்கின் அடிப்படையிலே அளிக்கின்ற பொழுது அதை வாங்குகின்றவர்களுக்குப் போதுமான அளவுக்குத் திருப்தி ஏற்படவில்லையென்றால் அவர்கள் மேல் முறையீடு செய்கிறார்கள். அப்படி மேல்முறையீட்டின் அடிப் படையில் ஆராய்ச்சி செய்த பிறகும் திருப்தி ஏற்படவில்லை யென்றால், அவர்கள் வழக்குமன்றங்களுக்குச் செல்லவும் வாய்ப்பு இருக்கிறது. வழக்குமன்றங்கள் பிறகு அவார்டு செய்கிறார்கள். அந்த அவார்டு செய்கின்றபொழுது, அவர்கள் கணக்கிட்டு கூடுதலாக தர வேண்டுமென்று அரசுக்கு ஆணையிடும்போது, அப்படிக் கூடுதலாக அரசு தருகின்றது. சில சமயங்களில் அவார்டு தருகின்றபொழுது நீதிமன்றம் ஒத்துக்கொள்கிறது. சில சமயங் களில் கூடுதலாகத் தரவேண்டுமென்று சொல்கிறார்கள். கூடுதலாகத் தர வேண்டுமென்று சொல்கின்றபொழுது மறுபடியும் மேல்முறையீடு நாங்கள் செய்வதில்லை. அந்த அவார்டை நாங்கள் ஏற்றுக்கொண்டு செய்கிறோம். அப்படிப்பட்ட நடைமுறைதான் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.